**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 81/2018**

**RW.1.**

*****

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 10- ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1983 ம் ஆண்டின் 105-வது சட்டம் ஏற்பாட்டின் படி திருமதி.S. மோகன ரம்யா., பி.ஏ., பி.எல்., தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : Suryapriya | **தகப்பனார் பெயர்** | : நல்லசிவம் |
| **கிராமம்** | : | **தாலுகா** | : மதுரை |
| **தொழில்** | : உதவியாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம் சிவகங்கை | **வயது** | : 38/2026 |

---

**முதல் விசாரணை**

**22.07.2026**

நான் தற்போது சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க சாட்சி சம்மன் சார்பு ஆகி உள்ளது. அவர் சார்பாக என்னை சாட்சியம் அளிக்குமாறு அங்கீகார கடிதம் வழங்கி உள்ளார். அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். டி.வேலங்குளம் ., கொத்தங்குளம் அஞ்சல், திருப்புவனம் தாலுகா, சிவகங்ை◌க மாவட்டம் முகவரியில் இருளப்பன் மகன் அய்யனார் என்று இரண்டு நபர்கள் உள்ளனர். அதில் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் TN 63 AC 9789 ஒருவருக்கு (அய்யனார் ) சொந்தமானதாகும். மேற்படி இரண்டு நபர்களில் ஓட்டுநர் உரிமம் சம்பந்தப்பட்ட பதிவேட்டின் Extract நீதிமன்றத்திற்கு எடுத்துவந்துள்ளேன். அது முறையே **எ.ம.சா.ஆ. 2 மற்றும் எ.ம.சா.ஆ. 3**

ஆகும். விபத்து வாகனம் சம்பந்தபட்ட அய்யனாரும் மற்றோரு அய்யானர் இருவரும்மே விபத்து தேதியில் ஒட்டுநர் உரிமம் இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பொதுவாக ஒரு நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கா இல்லை என்பதை அறிவதற்கு அவருடைய பிறந்த தேதி மற்றும் வருடம், மாதம் மற்றும் ஓட்டுநர் உரிமம் எண் இருந்தால் மட்டுமே ஓட்டுநர் இருக்கா இல்லை என்பதை அறியமுடியும் என்றால் சரிதான். எனக்கு வந்த அழைப்பாணையில் ஓட்டுநர் உரிமம் எண்ணோ பிறந்த தேதியோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நிரந்தர முகவரி இல்லதா நபர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளிமூலம் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் ஆதார் எண்ணை சரிபார்த்து தான் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். அய்யானார் என்பவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும் ஆவணங்களை சரியாக பார்வையிடாமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(sd/- S.Mohana Ramya)
தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.

Copy